பக்கங்கள்: எட்டு

Registered as a News Paper in Sri Lanka

விலை ரூபா: 5-00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 02 சனிக்கிழமை (17-11-2001) தொலைபேசி: 3378 ஒலி 34

மங்கையரின் மனம் மகிழும் ஜவுளிகளின் எழில்மிகு காட்சியகம்
காவேரி பட்டுச் சோலை
48, பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்
T. P 2333
(சி-2854)

## யாழ். வேட்பாளருக்கு விசேட பாதுகாப்பு

# தேர்தல் முடிந்தவுடன் வாக்கு எண்ணப்படும்

## கட்சித் தலைவர்களின் சந்திப்பில் தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(நமது நிருபர்)

அடுத்த மாதம் 5ம் திகதி நடைபெறவுள்ள 12வது பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு முடிந்த கையுடன் அந்தந்த மாவட்ட செயலகங்களில் வைத்து வாக்குகளை எண்ணுவதற்கும், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்வதற்கு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா இணக்கம் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சித்தலைவர்களுடனான தேர்தல் ஆணையாளரின் சந்திப்பு நேற்றுமாலை ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் ஐக்கியதேசியக்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, செயலாளர் கப்புக்கொட்டுவ காங்கிரஸ் பொதுச்செயலாளர் கலாநிதி என். குமர குருபரன், அயுயூசுப், கொழும்புமாவட்ட தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு வேட்பாளர் செல்லையா பத்மநாதன், மற்றும் ஜே.வி.பி, சிஹல உறுமய ஆகிய கட்சிகளின் பிரதிநிதி

(8ஆம் பக்கம் பார்க்க)

## காத்தான்குடியின் பாதுகாப்பிற்கு தனியான முஸ்லிம் இராணுவமுகாம்

### எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா முயற்சி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடிப்பிரதேசத்தின் பாதுகாப்புக்கென தனியே முஸ்லிம்களைக்கொண்ட இராணுவ முகாமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னாள் பிரதி அமைச்சர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்திலிருந்து விலகிய மற்றும் தலை மறவாகியுள்ள காத்தான்குடிப் பகுதி இளைஞர்களை மீண்டும் இராணுவத்தில் இணைந்து கொள்ளுமாறு பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கி மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருவதுடன் புதிதாக இராணுவத்தில் இணைந்துகொள்ள விரும்புவர்கள் தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது (ந-5)

## காணாமற் போனோர் சங்கம் டிசம்பர் 10ந் திகதி மௌனப்பேரணி நடத்தும்

[யாழ்ப்பாணம்]

மனித உரிமைகள் தினமான எதிர்வரும் 10ம் திகதி அன்று காணாமற் போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கம் யாழ்ப்பாணத்தில் மௌனப் பேரணி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

நல்லூரில் இருந்து ஆரம்பமாகும் தீபம் தாங்கிய இம் மௌனப்பேரணி யாழ்மனித உரிமைகள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் முடிவடையும்.

அன்றையதினம் குடாநாடு தழுவிய பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றையும் நடத்தவுள்ளதாக மேற்படி சங்கம் அறிவித்துள்ளது. [9, 19]

### அமைச்சர் டக்ளஸ பதிலளிப்பார்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிமுதல் 12 மணிவரை யாழ். மாவட்ட மக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கவுள்ளார்.

யாழ்சேவைமூலம் இடம்பெறும் இந்நிகழ்வில் 3722, 3723, 3724 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் மூலம் தொடர்புகொண்டு அமைச்சரிடம் கேள்விகேட்கமுடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது (!)

## பேனாவடிவில் துப்பாக்கி வைத்திருந்த இருவர் கைது!

(கொழும்பு)

பேனாவடிவிலான துப்பாக்கி ஒன்றை வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நேற்று இருவர் பம்பலப்பிட்டி பொலிசாரால் கொழும்பு பொரளையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும், தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சிறிய பேனாவடிவிலான சேட்பொக்கற்றில் வைக்கக்கூடிய துப்பாக்கி இனங்காணப்பட்டுள்ளது இதுவே முதல் தடவை என பம்பலப்பிட்டி பொலிசார் தெரிவித்துள்ளனர். (வ)

## தற்கொலைத் தாக்குதலால் மட்டு-பிரசாரம் ஸ்தம்பிதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற தற்கொலைத்தாக்குதலையடுத்து அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மந்தநிலை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்கொலைத் தாக்குதலின் அச்சம் காரணமாக கட்சி உறுப்பினர்கள் தமது கட்சிக் காரியாலயங்களில் முடங்கிக் கிடப்பதாகவும் தேர்தல் பிரசார வாகனங்களைக் கூட வீதிகளில் காணமுடியாதுள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

## நேற்று மட்டும் 800 தேர்தல் வன்முறைசம்பவம்

(கொழும்பு)

அடுத்த மாதம் 5ம்திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து நேற்றுவரை 800க்கும் அதிகமான தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தேர்தல் திணைக்களத்தின் பணிப்பாளர் பிரதிபொலிஸ்மா அதிபர் காமினநவரட்னா தெரிவித்துள்ளார்.

தேர்தல் வன்முறைகள் தொடர்பான செய்தியாளர் மகாநாடு நேற்று கொழும்பில் நடைபெற்றது அம்மகாநாட்டிலேயே பிரதி பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்.

800க்கும் அதிகமான தேர்தல் வன்முறைகள் நடைபெற்ற போதும் சுமார் 10 தேர்தல் வன்முறைகள் மிகவும் பாரதூரமானவையாகும் இதில் மூன்று அரசியல் படுகொலை சம்பவங்களும் அடங்கும் 1994ம ஆண்டு தேர்தலின் போது 18 அரசியல் படுகொலைச்சம்பவங்கள் நடைபெற்றுள்ளது என்றும் தெரிவித்தார். (வ)

## வாதுவவில் 27 தமிழர் கைது

(கொழும்பு)

கொழும்பு வாதுவதெகிகம பகுதியிலுள்ள வீடொன்றில் பொலிசார் மேற்கொண்ட திடீர் தேடுதலின்போது 27 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுபபிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற இத்தேடுதலில் 20 தொடக்கம் 25 வயதிற்குட்பட்ட இளைஞர்களே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களில் 13 பேர் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர் வெடியில் படைவீரர் பலி

(வவுனியா)

வவுனியாவடமேற்கு மறவன்குளம பகுதியில் சைக்கிளில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைபபுலிகள மேற்கொண்ட கிளைமோர்த்தாக்குதலில் ஒரு படைவீரர் கொல்லப்பட்டுள்ளார் மற்றும் இருபடைவீரர்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 9 30 மணியளவில இச்சம்பவம் இடம்பெற்றுளது.

உயிரிழந்தபடைவீரரின் சடலம வவுனியா வைத்தியசாலையில வைக்கப்பட்டுளளது. காயமடைந்த இரு படைவீரர்களும் அனுராதபுரம வைத்தியசாலையில அனுமதிக்கபபட்டுளளனர்.

இதனையடுத்து அபபகுதி முழுவதும் படையினரால் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தப்பட்டது. (ந-4)

### சரத்முனசிஙகாவுக்கு பாதுகாப்புஅதிகரிப்பு

முன்னாள் பிரதிசபாநாயகரும் தற்போதைய ஐக்கியதேசியக் கட்சி வேட்பாளருமான சரத்முனசிங்காவின் முறைப்பாடு தொடர்பாக விசாரணை மேற்கொண்ட போது பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ சரத்முனசிங்காவிற்கு ஐந்து இராணுவத்தினரின் உதவியுடன் பாதுகாப்பு அளிக்குமாறு உததரவிட்டுள்ளார்.

இதனை அடுத்து இம்மனு மீதான விசாரணை 29ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [வ]

## புலிகளுடன் ஐ.தே.கவுக்கு உடன்பாடு இருப்பினும் ரணில்விக்கிரமசிங்க அவர்களை நம்பக்கூடாது!

### அமைச்சர் டி. எம். ஜெயரத்தின ஆலோசனை

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு ஆகக் கூடுதலான பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக பொது ஜனஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி.எம். ஜெயரத்தின தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்காவிற்கு விடுதலைப்புலிகளினாலும் அரசாங்க தரப்பினாலும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிடிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகத்துறைப் பேச்சாளர் டாக்டர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்ததை அடுத்தே அமைச்சர் டி. எம். ஜெயரத்தின மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களும் பணமும் வழங்கிய முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை விடுதலைப் புலிகள் கொலைசெய்தனர் எனவே விடுதலைப் புலிகளுடன் எத்தகைய இரகசிய ஒப்பந்தங்கள் இருந்தாலும் விடுதலைப்புலிகளை நம்பவேண்டாம் என்றும் ரணில் விக்கிரமசிங்காவை டி. எம். ஜெயரத்தினகேட்டுக் கொண்டார். (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



# எம் மக்களோடு சில வார்த்தைகள்!

## எம் இனிய தமிழ்பேசும் மக்களுக்கு வணக்கம்!

தேர்தல் வரும் போது மட்டும் தேடி வருபவர்கள் நாமல்ல. தேசம் எரியும் போது தேசத்தில் மக்கள் நலியும் போது ஓடி ஒழிந்து கொள்பவர்களும் நாமல்ல. மக்களிடையே நின்று மக்களின் மகிழ்ச்சிக்காக என்றும் உழைப்பவர்கள் நாம்!

கூட்டு என்ற புதிய போர்வைக்குள் அதே பழைய முகங்கள் புன்னகையோடு உங்கள் வாசலுக்கு வாக்குக் கேட்டு வருகின்றன. ஆனால் உங்கள் புன்னகையோ எரிகின்ற யுத்தத்தினால் திருடப்பட்டு விட்டது.

எரிகின்ற யுத்தத்திற்கு அர்த்தமுள்ள அரசியற் தீர்வு வேண்டும்! தீர்வொன்று கிட்டும் வரை எம்மக்களுக்கான இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்! மக்களின் முகங்களில் புன்னகை பூப்பூக்க வேண்டும்! இதுவே ஈ. பி. டி. பி யின் அரசியல், நடைமுறைக் கோட்பாடு.

இன்றைய எமது நிலைப்பாடு அனுபவங்களின் வெளிப்பாடு! ஆனாலும் இதை நியாயப்படுத்துவதற்காக எமது கடந்த கால நடவடிக்கையினை கொச்சைப்படுத்த நாம் தயாரில்லை. ஆயுதம் ஏந்தி நாம் போராடியதை ஒரு போதும் நான் பிழையென்று கூறப்போவதில்லை.

போராட்டம் என்பது நிற்க வேண்டிய இடத்தில் நிற்கவும் நிதானித்துச் செல்ல வேண்டிய இடத்தில் நிதானித்தும் தொடரப்பட வேண்டும்! ஆகவேதான் எமது விடுதலையை நோக்கிய பயணத்தை இன்னொரு புதிய வடிவத்தில் நாம் முன்னெடுத்துச் செல்கின்றோம்.

எமது அரசியற் பலத்தைப் பயன்படுத்தி ''மத்தியில் கூட்டாட்சி. மாநிலத்தில் சுயாட்சி'', ''எககாலமும் பிரிக்கப்பட முடியாத வடக்கு கிழக்கு ஒரு அலகு, அதற்கு விசேட அதிகாரங்கள்'' என்னும் கோரிக்கையை முன் வைத்து, அரசுடன் பேரம் பேசி, அழுத்தம் கொடுத்து முழுமையாகவோ அல்லது கட்டம்கட்டமாகவோ எமது உரிமைகளை பெறமுடியும் என்று நாம் திடமாக நம்புகின்றோம்! இந்த வேலைத் திட்டத்தின அடிப்படையிலேயே நாம் நகர்கின்றோம்!

எமது மக்கள் துன்பத்தில் சாதல் கண்டு நாம் பொறுத்திருக்க முடியாது. மக்களின் துன்பத்தை வைத்து நாம் அரசியல நடத்தவும் விரும்பவில்லை. ஆகவே தான் நடைமுறைக்குச் சாத்தியமான, மாற்று வழியாக புதிய வழிமுறையை நாம் தேர்ந்தெடுத்தோம்.

இனத்தின் பெயரால் முளைத்த தேர்தற் கூட்டமைப்பொன்று உங்களைத் தேடி வருகின்றது.

இவர்களிடம் கொள்கை, கோட்பாடு குறித்த இலக்கை எட்டுவதற்கான ஒரு வேலைததிட்டம் எதுவுமேயில்லை.

1995 ஆம் ஆண்டு அரசு அரசியலமைப்புச் சீர்திருத்தம் ஒன்றை வெளியிட்டிருந்தது. அதற்கான மாற்று யோசனைகளை சமர்ப்பிக்குமாறு அரசு சகல அரசியற் கட்சிகளிடமும் கோரியிருந்தது.

எமது தாயகக் கோட்பாட்டை வலியுறுத்தி 19 பக்கங்களில மாற்று யோசனை ஒன்றை நாம் அரசுககு வழங்கியிருந்தோம். எந்தவொரு கொள்கைத் திட்டமுமே கொண்டிராத கூட்டணியினர் எந்த யோசனைகளையும் அரசிடம் சமர்ப்பித திருக்கவில்லை.

தேர்தற் கூட்டமைப்புக் கட்சிகளிடம் நான் மக்களின் சார்பாக வேண்டுகோள் விடுக்கின்றேன். உங்களால் முடிந்தால் உங்களது வேலைத்திட்டத்தையும் கொள்கைத்திட்டததையும் மக்கள்முன் சமர்ப்பிககமுடியுமா? இதுவிடயமாக பகிரங்கவிவாதத்திற்கும் ஈ.பி.டி.பி தயார்!

தாயானவள் ஒருத்தி கருவுற்றிருக்கும் போது தானாகவே பிரசவம் நடககும் என்று காத்திருக்க மாட்டாள். பத்தியம் காத்து சத்துணவு சாப்பிட்டு தன் குழந்தை குறைப் பிரசவமாகிவிடக்கூடாது என்பதில கவனமாக இருப்பாள்.

ஆம் இன்று எம் தேசத்தின் கருவறையில் சமாதானத்திற்கான வேட்கையொன்று கருவுற்றிருக்கிறது.

பிரசவம் சத்திர சிகிச்சையால் நடக்குமா? சாதாரணமாக நடக்குமா? இது அடுத்த விடயம்.

இப்போது கருவுற்றிருக்கும் எம்தேசத்திற்கு நல்ல பத்தியமும்சத்துணவும் தேவைப்படுகின்றது நாளாந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வு! அபிவிருத்திப் பணி! இவைகளை சத்துணவாகவும் பத்தியமாகவும் எம் தேசத்திற்கு ஈ.பி.டி. பி இயன்றளவு கொடுத்து வருகின்றது இதுவேஉண்மை;

இவைகள் சலுகைகள்தானா?...........மக்களே! நீங்கள்தான் தீர்மானமெடுக்கவேண்டும்!

பாலஸ்தீனமண்ணிலே நான் ஆயுதப்பயிற்சிஎடுத்த போது எனக்கிருந்த விடுதலை உணர்வு! அதற்கான போர்குணாம்சம் என்பன இப்பொழுதும் எள்ளவும் குறையாமலே இருக்கின்றன.

ஆயினும் நாம்மிகத்தெளிவாகவும்நிதானமாகவும்எமது அரசியலுரிமைக்கான போராட்டப் பாதையில் முன்னேறிவருகின்றோம் நாம்சலசலப்பை விரும்பவில்லைசாதனைகளையே விரும்புகின்றோம் சாதனைகள் ஒவ்வொன்றும் மக்களின் விடுதலையை நோக்கியதாகவே இருக்கும். அனாதைக் குழந்தைகள் போல் நடுத்தெருவில் நின்றிருந்த இயக்கங்களை தத்தெடுத்த தலைவர்கள் இன்று உரிமை பற்றி முழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

அரை குறைத்தீர்வுக்களுக்காகவோ, அரசுதரும் சலுகைகளுக்காகவோ எமது மக்களையும் தேசத்தையும் யாரிடமும் விலைபேசி விற்பதற்குநாம் விடுதலை உணர்வு அற்றவர்களல்ல. ஈ. பி டி. பி க்கு எதிராக நான்கு குழுக்கள் இணைந்து தேர்தற்கூட்டு அமைத்திருக்கின்றார்கள் இந்த நிகழ்வு நாம மாபெரும் சக்தியாக வளர்ந்திருப்பதையே குறித்து நிற்கின்றது.


அன்பார்ந்த மக்களே! மக்களை வதைப்பதற்காகவோ, மக்களிடம் வரியும், கப்பமும் வசூலிப்பதற்காகவோ புலிகளைப் பிடிப்பதற்காகவோ நாம் எமது தோழர்களை மக்களாகிய உங்களிடம் அனுப்பவில்லை.

- ★ மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுங்கள்!
- ★ எமது அரசியலுரிமையை வென்றெடுக்க உழையுங்கள்!
- ★ அறிவுசார்ந்த தேசத்தை உருவாக்குங்கள்!
- ★ மக்களை மரியாதையுடன் நடத்துங்கள்!
- ★ மக்களிடமிருந்து ஒரு ஊசியையோ நூலையோ கூட எடுககாதீர்கள்!
- ★ அபிவிருத்திப் பணியில் ஈடுபடுங்கள்!
- ★ அவர்களது கண்ணீரைத் துடையுங்கள்!
- ★ மக்களை- ஓரணியாக அணி திரட்டுங்கள்!

இது போன்ற கட்டாய கட்டளைகளையே நாம் எமது தோழர்களுககு பிறப்பித்திருக்கின்றோம்! சுவர் இருந்தால் மட்டுந்தான் சித்திரம் வரைய முடியும்!

ஈ. பி. டி. பி. யிடம் பலம் இருந்தால் மட்டுமே
எமது அரசியலுரிமையை பெறமுடியும்!
அந்தப்பலத்தை கட்டியெழுப்பும பணியில்
இப்போது நாங்கள்....
மக்களே! அந்தப்பணியில் உங்கள் கரங்களையும்
இணைத்துககொள்ளுங்கள்! ஈ.பி.டி.பி யைப்
பலப்படுததுங்கள்! தர்மம் வெல்லும!
தேசம் விடியும்! எங்கள் விடுதலைப் பயணத்தில்
மக்களின் கண்ணீரையும் துடைத்தே பயணிப்போம்!

**என்றும் நாம் மக்களின் நண்பர்கள்**
**தேசத்திற்காக தியாகங்களை ஏற்போம்**



உங்களில் ஒருவன்,
மக்கள் சேவையிலுள்ள,

**கே. என். டக்ளஸ் தேவானந்தா**
செயலாளர் நாயகம்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ- பி. டி. பி)

### தமிழர்தம் நியாயமான

# அரசியல் அபிலாசைகளை பூர்த்திசெய்தல் புலிகளுடன் பேசுவதால் சாத்தியமாகும்

### புளொட் சித்தார்த்தன் வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் மறுக்க முடியாத சக்தி என்பதனை ஏற்றுக் கொள்கிறோம். அவர்களுடன் பதவிக்கு வரும்அரசு பேசுவதால் மட்டுமே நியாயமான தமிழ்மக்களின் அரசியல்அபிலாஷைகளைப்பூர்த்தி செய்யக் கூடிய ஒரு தீர்வை எட்ட முடியும்''

இவ்வாறுஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி [புளொட்] டின் தலைவர் தர்மலிங்கம்சித்தார்த்தன்நேற்று தாம் கூட்டிய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

யாழ் நகரிலுள்ள கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர்;

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமாயின் புலிகளுடன் பேசவேண்டும் என்பதைசர்வ தேசமேபுரிந்து கொண்டுள்ளது. இதே வேளை ஆட்சி பீடமேறும் இரு பிரதானகட்சிகளும் புலிகளுடன் பேசவேண்டிய தன் அவசியத்தை நன்கு உணர்ந்துள்ளன.

இத்தேர்தல் மூலம் தமிழ் மக்கள் தமது ஆத்ம பலத்தைக் கூட்ட வேண்டும். வன்னியில் ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் தமிழ்க்கட்சிகளுக்கு வாக்களிப்பதன்மூலம் பெரும்பான்மை இனப்பிரதிநிதிகள் அங்கிருந்து பாராளுமன்றம் செல்வதைத் தவிர்கலாம்.

பதினொரு கட்சிகளின் கூட்டு ஏற்பாடு செய்த சகல நடவடிக்கைகளிலும் நாம் பங்குபற்றி கொழும்புமற்றும் மன்னார் மாவட்டங்களில் அரசின் அடாவடித்தனங்களுக்கெதிராகப் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்தோம்.

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு வெளியிட்ட விஞ்ஞாபனத்திற்கும் புளொட்டின் அடிப்படைக் கொள்கைகளுக்கும் இடையே வேறுபாடு கிடையாது. ஆனால் நான் வன்னியில் போட்டியிடுவதை கூட்டமைப்பிலுள்ள சிலர் விரும்பவில்லை. அதனால் தனித்துப் போட்டியிட நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு ஒரு பொதுவேலைத் திட்டத்தின் கீழ் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்க வேண்டும் ஆனால் இக்கூட்டு தேர்தலுக்காகஉருவாக்கப்பட்ட பாராளுமன்ற கதிரைகளை நோக்கமாகக் கொண்ட ஒன்றாகவேஇயங்குகிறது.

நாம் எமது பாதுகாப்பிற்காகவே ஆயுதங்களை வைத்திருக்கிறோம். கூட்டணிக்காரியாலயத்திற்குப்பொலிஸார் பாதுகாப்புவழங்குகிறார்கள்; எமது அமைப்பில் தோழர்கள் காவல் புரிகிறார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த இருவர்இன்றும் பாதுகாப்பு அமைச்சினால்வழங்கப்பட்ட பிஸ்ரலை வைத்திருக்கிறார்கள்.

1977 இல் கொண்டு வந்த தமிழீழக்கோரிக்கையை மீண்டும் இன்று தமிழர் கூட்டமைப்பு கொண்டுவருவதன் மூலம் நாட்டுக்காகஉயிரைத் தியாகம் செய்த 19ஆயிரம் புலிப் போராளிகளின் தியாகத்தை அர்த்தமற்றதாக்க முனைகின்றதா என்றுகேள்வி எழுப்பினார் சித்தார்த்தன்) (உ-106,9)

### மரணமான புளொட் உறுப்பினர்க்கும்

# புலிகளின் முக்கிய தலைவர்களின் கொலைகளுக்கும் தொடர்புண்டாம்

(கொழும்பு)

மட்டக்களப்புநகரில்நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலைத்தாக்குதலில்கொல்லப்பட்ட புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்தபுளொட்அமைப்பின் 3 உறுப்பினர்களும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நுட்பமான தாக்குதல்களை மேற் கொண்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவி மேற் கொள்ளப்படும் தாக்குதல்களுக்கு இவர்களே காரணகர்த்தாக்களாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகரான சங்கரின் கொலைக்கும் இவர்களேகாரணமாக இருந்ததாக சர்வ தேச ஏஜென்சிசெய்திநிறுவனமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. (உ-5)

### இலங்கையின் தேர்தல் நிலைவரங்களை

# வெளிநாட்டு தூதரக அதிகாரிகள் உன்னிப்பாக அவதானிப்பு

(கொழும்பு)

டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி நாடுதழுவிய ரீதியில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல்நேர்மையாகவும், நீதியாகவும், ஜனநாயகமுறையிலும் நடைபெறுகிறதா என்பதை வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளும் தேர்தல் கண்காணிப்பாளர்களும் ஆர்வத்துடன் எதிர்பார்த்தவண்ணம் உள்ளனர்.

இந்தவகையில் யாழ்ப்பாணம், வன்னி ஆகிய மாவட்டங்களிலும் தேர்தல்தொடர்பாக இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக அமெரிக்க தூதரக அதிகாரி ஒருவர் கொழும்பில்உள்ள தமிழ்க் கட்சி ஒன்றின் பிரமுகரிடம் கேட்டறிந்து கொண்டதாகவும்.

வடக்கு-கிழக்கில் ஏதாவது தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றால் அதுதொடர்பாக எமது கவனத்துக்கு கொண்டு வருமாறும் அமெரிக்காவின் தூதரக அதிகாரி தமிழ்க்கட்சிப் பிரமுகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இது இவ்வாறிருக்க ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவினரும், யாழ்ப்பாணம், வன்னி ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ள தேர்தலின்போது இடம்பெறவுள்ள வன்முறைகள்பற்றி தெரிந்துகொள்வதிலும நீதியானதும, நியாயமானதுமான தேர்தலை எதிர்பார்த்தவண்ணமும் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## படையினர் துப்பாக்கிச்சூடு மன்னார் இளைஞன் பலி

(மன்னார்)

மன்னார் உயிலங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை வேளை படையினர் நடத்திய தேடுதலின் போதுஅவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பலியான இளைஞரின் வீட்டிலிருந்து இரண்டு கிளைமோர் கண்ணிவெடிகள் கைப்பற்றப்பட்டதுடன் அவ் வீட்டில் இருந்த தம்பதியினரை தாம் கைது செய்துள்ளதாக படையினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இருவரும் மன்னார் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது, இருவரையும் எதிர்வரும் 29 ஆம திகதிவரை விளக்கமறியலில வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் அஜித் உத்தரவிட்டுள்ளார். (உ-5)

## கசிப்புபேர்வழிக்கு சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த யாழ்ப்பாணம அபூபக்கர் வீதி பகுதியைச் சேர்ந்த ச.சந்திரன் என்பவருக்கு 6மாத சாதாரண சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இவ்வழக்குவிசாரணையில் சம்பந்தப்பட்டவர் கடந்த தைமாதம கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதற்காக 3000/-குற்றப்பணமும் 1000/-தர்மப்பணமும் கட்டும்படி நீதிவான் திர்ப்பு வழங்கியதாகவும் சந்தேக நபர்500/- மட்டுமே கட்டியதாகவும் மிகுதிப்பணம் கட்டத் தவறியபட்சத்திலே இத்தண்டனையை யாழ் நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி இளங்கோவன் வழங்கியதாக தெரிவிக்கப்பட்டுளளது. [எ-10]

## துண்டுப்பிரசுரங்களை யாழ்.எடுத்துவர படையினர் தடையாம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலையொட்டி பிரசாரத்திற்கென தமிழ்க்கட்சிகளினால் கொழும்பில்அச்சடிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்களை யாழ்ப்பாணம் எடுத்துவருவதற்கு பாதுகாப்பு அமைச்சுஅனுமதி வழங்குவதில் இழுபறிநிலை காணப்படுவதாக தமிழ்கட்சி வட்டாரங்கள் கவலைவெளியிட்டுள்ளன.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவரும், யாழ். மாவட்ட வேட்பாளருமான அ.விநாயகமூர்த்தி, தமிழ்க் காங்கிரஸ் சார்பாககொழும்பில் அச்சடித்த துண்டுப்பிரசுரங்களை தம்முடன் எடுத்து வருவதற்கு பாதுகாப்புஅமைச்சு அனுமதி வழங்காததை அடுத்துதுண்டுப்பிரசுரங்களை கொழும்பிலேயே விட்டுவிட்டு வந்துள்ளதாக தெரிவித்தார். (வ)

### உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில்

# புதிய ஆண்டில் இருபுதிய கற்கை நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் எதிர்வருடபுதிய கல்வியாண்டில் இருபுதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

புதிய கல்வியாண்டில், அலுவலக செயலாண்மை நடைமுறைகள் மலையியல் பொருளியல் ஆகிய இரு கற்கைநெறிகளே புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதுவரை இந் நிறுவனத்தில் ஐந்து கற்கைநெறிகளே போதிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ-2)

# இராசிபலன்

17-11-2001

கார்த்திகை 02 சனி
துதியை மு. ப. 11. 36
கேட்டை மு. இ. 9. 09
ராகுகாலம் 9. 08- 10. 38
சுபநேரம் 3. 08- 4. 38
சித்தம்

**மேடம்**
மனக்கிலேசம், உறவினர் வெறுப்பு, முயற்சி தாமதம், போசனசுகம்.

**இடபம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, காரியநன்மை, தனலாபம், கௌரவம்.

**மிதுனம்**
சத்துரு ஜெயம், செய்தொழில் விருத்தி, முயற்சி வெற்றி, திடீர் பயணம்.

**கடகம்**
உடல் சோர்வு, பிரயாண தாமதம், சிறுவியாதி, காரிய தாமதம்.

**சிங்கம்**
தாய்வழிஉறவு, ரோக பயம், மாணவர் கல்விசிறப்பு, முயற்சி மந்தம்.

**கன்னி**
வாக்குபலிதம், புதிய பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம், சகோதரர் உதவி.

**துலாம்**
தனவிரயம், மதிப்புக் குறைவு, தொழில் மந்தம், காரியதாமதம்.

**விருச்சிகம்**
நண்பர் உதவி, சயனசுகம், தொழில் நன்மை, திடீர் பந்தம்.

**தனுசு**
தொழில் கஷ்டம், காரிய செலவு. பிதாவழி நன்மை, மனச்சஞ்சலம்.

**மகரம்**
குடும்பநன்மை, முயற்சி, கைகூடும், நல்ல வரவேற்பு, தொழில் சிந்தை.

**கும்பம்**
சுபநிகழ்வு, உற்சாகம், செய்தொழில்மேன்மை, கீழ்ப்படிவு.

**மீனம்**
நிலைமாற்றம், ஆன்றோர் மதிப்பு, கட்டுப்பாடு, காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## "நாளை நல்ல நாள்" நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பா.சிவபாலனின்வானொலி நாடகத் தொகுப்பான, "நாளை நல்ல நாள்" நூல் வெளியீட்டு விழா இன்று மு.ப. 10மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கோட்டக்கல்விஉதவிக்கல்விப் பணிப்பாளர் ஆ இராஜகோபால் தலைமையில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் கலந்து கொள்வார்.

வெளியீட்டுரையை வலயக் கல்வி, பிரதிக்கல்விப் பணிப்பாளர் நா. வரதராசாவும் ஆய்வுரையை ந சுந்தரம் பிள்ளையும் பதிலுரையை நூலாசிரியர்பா.சிவபாலனும் நிகழ்த்துவர். (உ- 5, 19)

## ஜவ்பர்கானின் 'மௌன தேசம்' வெளியீடு

(மட்டக்களப்பு)

கவிஞரும் செய்தியாளருமான ரீ. எல். ஜவ்பர்கான் எழுதிய 'மௌன தேசம்' கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சட்டத்தரணி அல்ஹாஜ் ஏ எல். அப்துல் ஜவாத் தலைமையில் காத்தான குடி ஹிஸ்புல்லாஹ் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. (உ)

## முறைப்பாடு செவிசாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள காணியில் மிகுந்த பற்றைகளும் செடிகளும் உள்ளதனால்பாடசாலைமாணவர்கள் நுளம்புக் கடிக்கும் மயிர்கொட்டிப்புழுவின்தொல்லலக்குப் உள்ளாகி வருவதாகவும்.

யாழ்.மாநகர சபைக்குகல்லூரி அதிபர் முறைப்பாடு செய்துள்ளதையடுத்து மாநகரசபை ஊழியர்களால் இக்காணிநேற்று முதல் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது. (உ-2)

### ஆயுதம் வைத்திருக்கின்றோம் என்பதால்

# மக்களை மிரட்டவும் படையினருடன் சேர்ந்து செயற்படவும் அதனைப் பாவிப்பது கிடையாது

## பி. பி. சி. பேட்டியில் சித்தார்த்தன் தெரிவிப்பு

(லண்டன்)

அடுத்தமாதம்05 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் புளொட் (தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்) தமிழ்க்கட்சிக்கூட்டமைப்புடன் சேராது தனித்துப் போட்டியிடுவது பற்றி இவ்வமைப்பின் தலைவர் தருமலிங்கம் சித்தார்த்தன் பி. பி. ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வி.

**கேள்வி**

தமிழ்க் கட்சிகளின் கூட்டு அமைப்புடன் சேராது ஏன் தனித்துப் போட்டியிடுகிறீர்கள்?

**பதில்**

தமிழ்க் கட்சிகளின் கூட்டு அமைப்பில்நாங்களும் இணையத் தயாராகவுள்ளதாக பத்திரிகைகளில் அறிக்கை விட்டிருந்தோம். அவ்வறிக்கையின் அடிப்படையில் பல தமிழ்ப் பேராசிரியர்கள், மதத் தலைவர்கள், அறிஞர்கள், சமூகத் தொண்டர்களபோன்ற பலர் மிகப்பெரிய அழுத்தத்தை அந்த நான்குகட்சி கூட்டமைப்பிற்கு கொடுத்தார்கள். அவ்வாறுஅழுத்தம் கொடுத்த போது அக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்னோடு தொடர்பு கொண்டு இக் கூட்டமைப்பில் சேர்வதற்கு என்னையும் அழைத்தார்கள். எவ்வித தயக்கமும் இன்றிநான்சொன்னேன்; சேர்வதற்கு நாம் தயாராகவிருக்கிறோம். ஏன் என்றால் அடிப்படையில்நாங்களும், அவர்களும் சொல்லுகின்ற விடயங்களுக்கிடையில் எவ்வித வேறுபாடும் இல்லை.

**கேள்வி**

நீங்கள் இராணுவத்தினருடன் சேர்ந்து செயற்படக்கூடாது அப்பாவித் தமிழ் இளைஞர்களைக் காட்டிக் கொடுக்கக் கூடாது. அப்படிப்பட்ட நிபந்தனைகளைத்தான் இந்தக் கூட்டமைப்பு விதித்ததாகவும் நீங்கள் அதற்கு இணங்கவில்லை என்றும் கூறப்படுகிறதே?

**பதில்**

இந்த விதிகளை அவர்களுடன் கூட்டமைப்பில் இருக்கும் மற்றக் கட்சிகளிடமும் அவர்கள் முதலில் கேட்டிருக்க வேண்டும்.

**கேள்வி**

நீங்கள் இராணுவத்தினருடன் சேர்ந்து செயற்படுகிறீர்கள் அல்லவா?

**பதில்**

இல்லை. இன்று நேற்றல்ல கடந்த பதினெட்டு வருடங்களுக்கு மேலாக நாம் ஆயுதம்வை தகிருக்கின்றோம்.

**கேள்வி**

எதற்காக நீங்கள் ஆயுதம் வைத்திருக்கின்றீர்கள்?

**பதில்**

ஒன்று எங்களுடைய தற்பாதுகாப்பிற்காக, இரண்டாவது வவுனியாவில் எல்லைக் கிராமங்களில் வசிக்கும்பொது மக்களின் பாதுகாப்பிற்காகவும். நாங்கள் அந்த எல்லைக் கிராமங்களில் தங்கியிருக்கத் தொடங்கியபின்புதான் அங்கு வாழ்கின்ற மக்கள் நிம்மதியாக நித்திரை செய்கிறார்கள். நீங்கள் வந்து பார்த்தால் இது புரியும்.

**கேள்வி**

அதாவது நீங்கள் மக்களின் பாதுகாப்புக்காக ஆயுதத்தை வைத்திருப்பதாக கூறுகிறீர்கள். ஆனால் உங்கள் கட்சி வவுனியாவில் சட்டம் ஒழுங்கை கையில் எடுத்துக் கொண்டு செயற்படுவதாகவும், இராணுவத்தினருடன் சேர்ந்து சுவரொட்டிகள் ஒட்டுவது, ரோந்துக்காவல் செய்வது, பொது மக்களை பணத்திற்காக மிரட்டுவது போன்ற செயல்களில் ஈடுபட்டிருப்பதாகவும் குற்றச் சாட்டுக்கள் இருந்திருக்கின்றனவே?

**பதில்**

கடந்த காலங்களில் தவறுகள நடக்கவில்லை என்று கூறவரவில்லை. தவறுகள் நடந்திருக்கின்றன. அது திருத்தப்பட்டும் இருக்கின்றன; ஆனால் இந்தக் கூட்டமைப்புகளில் இருக்கின்ற கட்சிகள் செய்கின்ற தவறுகளை ஆதார பூர்வமாக நாங்கள் நிருபித்து வருகின்றோம்.

**கேள்வி**

கூட்டமைப்பின் குறைகளை எடுத்துக் கூறுகின்றீர்கள். உங்களுடைய தவறுகளை மற்றவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள. அதற்கு உங்கள் பதில் என்ன? மக்களை, வர்த்தகர்களை மிரட்டுகிறீர்கள என்றெல்லாம் குற்றச்சாட்டுகள் எழுகின்றன, அதற்கு உங்கள் பதில் என்ன?

**பதில்**

எங்களிடம் நிச்சயமாக ஆயுதம் இருக்கிறது. ஆனால் ஆயுதத்தால் மககளை மிரட்டுவதோ அல்லது இராணுவத்தினருடன் சேர்ந்து செயற்படுகின்றமையோ கிடையாது.

**கேள்வி**

உங்கள் கட்சி மட்டக்களப்பில் கூட தேர்தல் அடாவடிகளில் ஈடுபட்டிருப்பதாகவும் வேட்பாளர்ஒருவரைக் கூடத் தாக்கியிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றனவே?

**பதில்**

அது--- அது--- அது---எங்கள் கட்சி அல்ல. பொதுவாக எங்கும் நடக்கின்ற ஒரு விடயம். அது எனக்குத் தெரியாது?

**கேள்வி**

இல்லையே இது குறித்து காத்தான் குடி பொலிஸ் நிலையத்தில் கூடப்புகார் செய்யப்பட்டிருககிறது.

**பதில்**

அது---இன்று---அ---யாழ்ப்பாணத்தில் ரீ யூ. எல். எவ். கட்சியினர் கூட வேறொரு கட்சிக்கு எதிராகத் தாக்கல் செய்துள்ளனர்.

**கேள்வி**

மற்றவர்கள் செய்வதை நான் குறிப்பிடவில்லை. உங்களுடைய கட்சிக்கு எதிராக எழுந்துள்ள குற்றச் சாட்டுக்கள் பற்றியே நான் கூறுகின்றேன். அதற்கு உங்களுடைய பதில் என்ன?

**பதில்**

காத்தான்குடிபொலிஸ்நிலையத்தில் புகார் செய்யப்பட்டிருந்தமை பற்றி எனக்கு உண்மையிலேயே தெரியாது? இது பற்றி எனக்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை. ஆனால் ஒன்று நிச்சயமாகத்தெரியும்: காத்தான் குடியில் ஒரு சிறு பிரச்சினை நடந்ததாகவும் எங்களுடைய தோழர்களிடம் சென்றதாகவும், ஆனால் நீங்கள் புகார் செய்யப்பட்டதாகக் கூறுகிறீர்கள். உண்மையிலேயே மக்கள் தான் அந்த வேட்பாளருக்கு எதிராக கிளர்ந் தெழுந்துள்ளார்கள். இது பற்றி நான் ஒரு--ஒரு முறைப்பாட்டைத்தான் கேள்விப்பட்டேன்.

**கேள்வி**

இல்லை உங்களுடைய ---

**பதில்**

தோழர்கள் எந்த விதத்திலும் அதில் ஈடுபடவில்லை

**கேள்வி**

அதாவது உங்கள் கட்சிக்கும் இந்த தாக்குதலுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றா கூறுகிறீர்கள்?

**பதில்**

அதாவது எங்களுடைய தோழர்களுக்கு; எங்களுடைய ஆதரவாளர்கள யாராவது இதில் சம்பந்தப்பட்டிருக்கலாம், எங்கள தோழர்கள் அதாவது எமது கட்சி உறுப்பினர்கள இதில் நிச்சயமாகச் சமபந்தப்படவல்லை.

**கேள்வி**

அப்படியானால் உங்கள் ஆதரவாளர்கள இப்படிப்பட்ட அடாவடித்தனங்களில் ஈடுபடுகிறார்கள என்றா கூறுகிறீர்கள?

**பதில்**

அது--- அது-- அடாவடித்தனங்கள் தேர்தல் காலங்களில் வருவது மாற்று அரசுகளை கேளவிகேட்பது, இது பொதுமக்களுக்கு சாதாரண விடயம்.

**கேள்வி**

என்ன? வேட்பாளர் ஒருவரைத் தாக்குவது சாதாரண விடயமா?

**பதில்**

அவ்வேட்பாளரைக் கேள்வி கேட்டதையே அவர் தன்னைத் தாக்கியதாக முறைப்பாடு செய்திருக்கலாம் என நான் நம்புகின்றேன்.

**கேள்வி**

இந்த தேர்தலில்உங்களுக்கு மக்களின் ஆதரவு கிடைககும். உங்களது வேட்பாளர்கள் வெற்றி பெறுவார்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா? எத்தனை ஸ்தானங்கள் உங்களுக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கிறீர்கள்?

**பதில்**

நிச்சயமாகநாங்கள்வெற்றி பெறுவோம். இரண்டு தொடக்கம் நான்கு ஸ்தானங்களை நாங்கள் எடுப்போம்,


வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி

## வேலைகளுக்கான
# கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தவிசாளரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரங்கள் 26-11-2001ஆம் திகதி நண்பகல் 12:00 மணி வரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் எம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், கேள்விசமர்ப்பிப்பதற்கு தகுதியுள்ளபொது அமைபபுக்களிடமிருந்தும், கோரப்படுகின்றன. கீழே குறித்த தொகையை செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொளளலாம்.
2. கேள்விப் பத்திரத்தில் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து தலைவர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு இரண்டாம் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இரண்டு பிரதிகளையும உரிய இடங்களில் 28-11-2001 முற்பகல் 11.00 மணிக்கிடையில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.
3. கேள்விகள் 28-11-2001 நண்பகல் 12.00 மணிக்குத் திறக்கப்படும்: அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
4. மேலதிக விபரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொளளலாம்.

| தொ இல | வேலை விபரம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப் படாத பொருட்கள் சேவைகள் வரி |
|---|---|---|---|---|
| 1. | கரணவாய் தெற்கு அந்திரான் ச. ச. நிலைய கட்டிடம் புனரமைத்தல் | 1500/- | 250/- | 31.25 |
| 2. | சமரபாகு பராசக்தி ச. ச. நிலைய கட்டிடய புனரமைத்தல் | 1000/- | 250/- | 31.25 |
| 3. | கரணவாய் தெற்கு சோளங்கன் ச. ச. நிலைய நீர்வசதி ஏற்படுத்தல். | 500/- | 250/- | 31.25 |
| 4. | கரணவாய் கிழக்கு வளர்மதி ச. ச. நி. கட்டிடம் புனரமைத்தல் | 500/- | 250/- | 31.25 |
| 5. | கொல்வெளி வீதி புனரமைத்தல் | 1000/- | 250/- | 31.25 |
| 6. | செம்பாடு வீதி புனரமைத்தல | 1500/- | 250/- | 31.25 |
| 7. | மாணிக்கவாசகர் வித்தியாலய வீதி | 1500/- | 250/- | 31.25 |
| 8. | ஞானசாரியார் வீதி | 1000/- | 250/- | 31.25 |
| 9. | நெடுங்கேணி வீதி | 2000/- | 250/- | 31.25 |
| 10. | அல்வாய் புதுக்குளங்கரை வீதி | 1000/- | 250/- | 31.25 |
| 11. | அழகுசீமா வீதி | 1000/- | 250/- | 31.25 |
| 12. | வதிரி கிளானை களுக்காவத்தை வீதி | 1000/- | 250/- | 31.25 |
| 13. | வல்வெட்டிஉழுத்தயபிவீதி புனரமைத்தல் | 1000/- | 250/- | 31.25 |
| 14. | மித்தில் பொதுக்கிணறு புனரமைத்தல் | 500/- | 250/- | 31.25 |
| 15. | தச்சவனை வீதி அணைகட்டல் | 1000/- | 250/- | 31.25 |
| 16. | அல்லையம்பதி மணல்பாதி வீதி புனரமைத்தல் | 1000/- | 250/- | 31.25 |
| 17. | துவாளி வீதி புனரமைத்தல் | 1000/- | 250/- | 31.25 |
| 18. | உடுப்பிட்டி மரக்கறிக் கொட்டகை புனரமைத்தல் | 2000/- | 250/- | 31.25 |
| 19. | உடுப்பிட்டி அரிசிஆலை ஒழுங்கை புனரமைத்தல் | 1000/- | 250/- | 31.25 |

த. ஜெயராசா
தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

12-11-2001
(C-2878)

## இன்று ஒரு தகவல்

# சொர்க்கத்தை தேடியவன்

பக்திரிய நாட்டு ஆளுநர் இபுராகீம் ஆடம்பரமான வாழ்வில் ஈடுபட்டிருந்தார். நான்கடுக்கு மாளிகையில் செல்வச் செழிப்புடன் தங்கியிருந்தார். எப்பொழுதும் நான்காவதுமாடியில்அமர்ந்து தான் தொழுகையில் ஈடுபடுவார். ஒருநாள் எவனோ ஒருவன் திடீரென்று அவர் மாளிகைக்குள் நுழைந்தான். மடமடவென்று நான்காவது மாடிக்கு ஓடினான் அங்கே எதையோ தேடிக்கொண்டிருந்தான்.

நடந்ததை எல்லாம் பார்த்த இபுராகீம் கோபம் கொண்டார். யார் நீ? எதற்காக இங்கே வந்தாய்? என்ன தேடுகிறாய்? என்று கோபத்துடன் கேட்டார். ''ஐயா! ஒட்டகக்காரன் நான். என் ஒட்டகம் காணாமற் போய்விட்டது. அதைத் தேடித்தான் இங்குவந்தேன்'' என்று பதில்தந்தான் அவன். இதைக் கேட்டதும் இபுராகீமின் கோபம் எல்லை மீறியது. ''என்ன விளையாடுகிறாயா? ஒட்டகமாவது நான்காவது மாடிக்கு வருவதாவது. எங்காவது ஊர்ப்புறம் அல்லது பாலைவனத்தில் தேடுவது தானே'' என்று கத்தினார்.

''ஐயா! உங்கள் மாளிகையின் நான்காவது மாடியில் அமர்ந்து தொழுகை செய்து சுவர்க்கத்தைத் தேடுகின்றீர்களே! இறைவன் எளிமையானவர்களிடத்து வருவாரா தவிர ஆடம்பரமான இடத்திற்கு வருவாரா? இயலாத முயற்சியை நீங்கள் செய்யும் போது. காணாமல் போன ஒட்டகத்தை நான் ஏன் நான்காவது மாடியில் காணமுடியாது'' என்றான் அவன். திடுக்கிட்ட இபுராகீம் அன்றே துறவியாவது என்று முடிவுக்கு வந்தார். அதன்பிறகு வாழ்க்கை முழுமையும் எளிமையாகவே வாழ்ந்தார். □

பேராசிரியர் எ.சோதி

# மூத்த கலைஞர்கள் 83 பேர் நாளை கௌரவம் பெறுகின்றனர்

[யாழ் பாணம்]

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் யாழ்.மாவட்டத்தில் கலைச்சேவையாற்றிய மூத்த கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வுநாளை காலை 9 30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நாளைய தினம் கௌரவம் பெறும் 83 மூத்த கலைஞர்களின் பெயர் மற்றும் ஏனைய விபரங்கள் வருமாறு,

**நெடுந்தீவு**

மரியான சவரிமுத்து இசை நாடகம், சைமன் ஜேசுதாசன் நாட்டுக்கூத்து, யாக்கோப்பு அடைக்கலமுத்து (நாட்டுக்கூத்து. சின்னத்தம்பி நாகேந்திரம் மிருதங்கம்), அந்தோனிப்பிள்ளை அமிர்தநாயகம் இசைநாடகம்.

**வேலணை**

நாகமுத்து விஸ்வலிங்கம் கதாப்பிரசங்கம், முத்தையா பரமேஸ்வரன் ஓவியம், திருமதி அனுஷம்மா இளையதம்பி பலதுறை, திருமதி பத்மாவதி திருஞானச்செல்வம் -பல்துறை, ஆறுமுகம் சோமசேகரம்-பல்துறை;

**ஊர்காவற்றுறை**

கந்தையா சோமசேகரம் பல்துறை, சிவஸ்ரீ கணபதீஸ்வரக்குருக்கள்- பல்துறை, திருமதி சௌந்தரராணி-வயனின், நாகலிங்கம் தாமோதரம்பிள்ளை- நாட்டுக்கூத்து, இராமலிங்கம் துரைசாமி- பல்துறை.

**யாழ்ப்பாணம்**

செல்லையா சிவப்பிரகாசம் -சிற்பம், ம. பொனிபஸ் தைரியநாதன்-இசை நாடகம், பஸ்தியாம்பிள்ளை அல்பிரட் ஜேக்கம்- நாட்டுக்கூத்து. வெலிச்சோர்யூலியஸ்கொன்ஸ்ரைடைன்-நாடகம், ஜி.பி; பேர்மினஸ்-நாடகம்.

**நல்லூர்**

ச. கைலாயநாதன்- நடனம் ஏ.ரி.பென்னுத்துரை நாடகம், த.செல்வரட்ணம்- நாடகம்

செ. பொன்னுத்துரை ஆர்மோனியம், என் கே. பத்மநாதன் நாதஸ்வரம், எஸ். பிச்சையப்பா நாதஸ்வரம், கந்தையா சுந்தரலிங்கம் ஓவியம், எஸ். இராசரத்தினம் சிற்பம், எஸ். கானமூர்த்தி நாதஸ்வரம், எஸ். ஆர். திருஞானசம்பந்தர்பண்ணிசை, செல்லையா மெற்றாஸ் மெயில் நாட்டுக்கூத்து, பொ. சந்திரசேகரம் இசை, எஸ். ஸ்ரீரங்கநாதன் இசை,

**சண்டிலிப்பாய்**

கந்தையா உருத்திராபதி இசைநாடகம், எஸ். செல்வராஜா நாடகம், சுவகீன் பிள்ளை ஜேசுதாசன் நாட்டுக்கூத்து. சரவணமுத்து சிவராஜா நாடகம், சூசைப்பிள்ளை அகஸ்டின் இசை,

**சங்கானை**

எஸ். கணபதிப்பிள்ளை இசை, வை. உருத்திரன் இசை, சி அமரசிங்கம் சிற்பம், நாதஸ்வரம், ப.த அமிர்தநாதன் ஓவியம், எஸ் சிவசண்முகமூர்த்தி கதாபிரசங்கம்.

**உடுவில்**

எம். எஸ்; ஸ்ரீதயாளன் கதாப்பிரசங்கம், மா. சீவரத்தினம் இசைநாடகம், சி. சண்முகவடிவேல் நாடகம், திருமதி ஞா. சிவனேசன் இசை, எஸ். சுந்தரமூர்த்தி நாதஸ்வரம், எஸ். நித்தியானந்தன் தவில், விஸ்வலிங்கம் பரஞ்சோதி பண்ணிசை, எஸ், சிவஞானராஜா இசை, எஸ், ஞானசுந்தரம் இசை;

த. க. சின்னராசா தவில்.

**தெல்லிப்பழை**

சின்னர் செல்வராசா நாட்டுக்கூத்து, எம். தேவராசா நாட்டுக்கூத்து சு. செல்லத்துரை நாடகம், வயிரவப்பிள்ளை கந்தையா நடராசா இசை,

**கோப்பாய்**

குமாரசாமி தங்கவடிவேல் நாடகம், சி. வைரமுத்து நாட்டுக்கூத்து, வே. இளையகுட்டி பல்துறை, எஸ். செல்லத்துரை இசை;

**சாவகச்சேரி**

பொன்னுத்துரை வாமதேவன் சங்கீதம், கிருஸ்ணசாமி ஏரம்பமூர்த்தி சங்கீதம், சடையன் சிவஞானம் நாடகம், துரையப்பா மாணிக்கவாசகர் மிருதங்கம்,

**கரவெட்டி**

கணபதிப்பிள்ளை பரஞ்சோதி நாடகம், ஆழ்வாப்பிள்ளை குமாரசாமி வாத்தியக்கலை, சு வி சரோஜா தம்பு இசை கதிர்தணிகாசலம் பண்ணிசை. முருகேசு கந்தப்பு பல்துறை.

**பருத்தித்துறை**

சந்திரசேகரம் இராஜதுரை இசைநாடகம், முத்தையா சாம்பசிவம் சங்கீதம், வைத்தீஸ்வரர் சிவசுப்பிரமணியம் ஓவியம், வீரகத்திப்பிள்ளை முருகேசு சிற்பம்,

**மருதங்கேணி**

சின்னையாதுரைசாமி நாட்டுக்கூத்து. சூசைப்பிள்ளை றோக் நாடடுக்கூத்து, அந்தோனிப்பிள்ளை நாடகம், வைரவப்பிள்ளை விஜயரத்தினம் இசை,

**பளை**

கந்தையா கனகரத்தினம் நாடகம், முத்து மரியநாயகம் ஆர்மோனியம், செல்லையா இரத்தினகுமார் இசை, தம்பிஐயா கந்தசாமி ஆர்மோனியம, அ நீக்கிலாப்பிள்ளை நாட்டுக்கூதது.

இக்கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சுச் செயலாளர் வே. இரகுநாதனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிளளை, இசைப்பேரரசு ந. வீரமணி ஐயர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்வளவு பெருந்தொகையான மூத்த கலைஞர்கள் கௌரவிப்பு ஒரே தடவையில் யாழில் இடம்பெறுவது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-10)

# படகு கட்டும் பணி விரைவில் நிறைவு

(ஈச்சமோட்டை)

நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் இருபது இலட்சம் ரூபாய் செலவில்மேற்கொள்ளப்பட்டு வரும் படகு கட்டும்பணி நிறைவுக்கட்டத்தை நெருங்கியுள்ளது.

இன்னும் ஓரிரு வாரங்களில் போக்குவரதது சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ள இப் படகு மூலம் பயணிகள் மற்றும் பொருட்களை ஒரே நேரத்தில் கொண்டு செல்ல முடியும்.

இதன் சேவையால் நெடுந்தீவு வாழ் மக்கள் பெரும் நன்மை அடைவார்கள் எனவும் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன. (உ 59)

# வன்னி வேட்பாளர்களுக்கு விசேடஅடையாள அட்டை

(கொழும்பு)

அடுத்த மாதம் 5 ஆம்திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடும் வன்னி மாவட்ட வேட்பாளர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன;

இதற்கானஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட தெரிவத்தாட்சிஅதிகாரி கே. கணேஷ் தெரிவித்துள்ளார்.

சோதனைச் சாவடிகளில் இலகுவாகப் பயணம் செய்வதற்கு ஏதுவாக தெரிவத்தாட்சி அதிகாரியின்சிபார்சிற்கமைய இராணுவக்கட்டளை அதிகாரியினால் இவ் அடையாள அட்டைகள். வழங்கப்படும் என தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்; (செ)

# அரச ஊடகங்கள் மீது ஐ. தே. க. பாய்ச்சல்

(கொழும்பு)

அரச ஊடகங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அபகீர்த்தியை ஏற்படுத்திவருவது குறித்து அக் கட்சியின் பிரமுகர்கள் கவலை தெரிவித்துள்ளனர்;

அரச ஊடகவியல் சாதனங்களின் செயற்பாடுகள் எதிர்க்கட்சிக்கு விரோதமாக இருப்பதுடன் மக்களை திசைதிருப்பி இனவாதத்தை தூண்டிவிடுவதாக அமைந்துள்ளது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்;

ஐக்கிய தேசியக்கட்சியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பேசுகையிலேயே கரு ஜெயசூரிய மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கடந்த ஒக்டோபர் 10 ஆம் திகதி முதல் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் இலங்கை சுயாதீன தொலைக்காட்சி மற்றும் லேக்கவுஸ் நிறுவனம் ஆகியன தொடர்ந்தும் இது போன்ற தவறான செயல்களை செய்துவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பத்திரிகையாளர் மாநாட்டை அடுத்து ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடகவியல் பேச்சாளர் கருணாசேனகொடித்துவக்கு, பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கை சந்தித்து ஊடகங்கள்பாரபட்சம்காட்டி வருவதாக முறைப்பாடு செய்துள்ளதாகவும் அம்முறைப்பாட்டை விசாரணைக்குட்படுத்த பொலிஸ்மா அதிபர் முயற்சி செய்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

# திருமதி இராமநாதன் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவராக திருமதி கலைவாணி இராமநாதன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்து நாகரிகத்துறையின் தலைவராக இருந்த ப. கோபாலகிருஷ்ண ஐயர் கலைப்பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதையடுத்து,

இந்து நாகரிகத்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பல வருடங்கள் கடமையாற்றிய திருமதி கலைவாணி இராமநாதன் இந்துநாகரிகத் துறைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ந)

# கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி
# நேர்முகத் தேர்வுக்கு தெரிவானோர் பெயர்கள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய தேசிய கல்வியியற்கல்லூரிகளின் 2001 ஆம் வருடத்திற்கான அனுமதி தொடர்பான நேர்முகப் பரீட்சைகள் விரைவில் நடைபெறவுள்ளன;

இதன் பிரகாரம் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கு கோப்பாயிலுள்ள யாழ். தேசிய கல்வியியற்கல்லூரியில் இம்மாதம் 26 ஆம் திகதிமுதல் 30 ஆம் திகதிவரை நடைபெறுவதற்கான ஒழுங்கினை நேர்முகப் பரீட்சைக் குழுவின் தலைவரும், வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியுமான செ. அழகரத்தினம் தெரிவித்துள்ளார்,

இதேவேளை, இது தொடர்பான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் விபரங்களை பாடநெறி ரீதியாக வலம்புரிக் காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் வந்து பார்வையிடலாம்;

மேற்படி பட்டியலில்பெயர் வெளியானவர்கள் நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதம் இடைக்காவிடினும் நேர்முகப் பரீட்சை இடம்பெறும் தினங்களில் தோற்றமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# வாராந்த நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறுசந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரின் வாராந்த நிகழ்வுகளில் நேற்று வெள்ளிக்கிழமை மு.ப 10 30 மணிக்கு யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியர் எஸ். கணேசனின் அறிமுகவுரையைத் தொடர்ந்து 'குருதத்துவம்' என்னும் தலைப்பில் சிவயோகராணி கதிரவேலு சொற்பொழிவாற்றினார்; [செ]

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறுசந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரின் கந்த சஷ்டி கால விசேட நிகழ்வாக தினமும் இடம்பெறும் செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேலின் சொற்பொழிவில் இன்று 'மேன்மைகொள் சைவநீதி' என்னும்தலைப்பில்சொற்பொழிவு இடம் பெறவுள்ளது; (செ)

## சிந்தனைக்கு விருந்து

### வணங்குதல் வாழ வழி

காப்பான் களிமயிலான் கந்தப் பெருமான்எம்
தீப்பாவம் யாவையும் தீய்த்திடுவான் - காப்பாடத்
தந்தவனைச் சந்தத் தமிழாலே பாவிசைத்து
வந்தித்தல் வாழ வழி.

'பழையவன்'

# அமெரிக்க விமானங்களின் பக்கபலத்துடன் கந்தகாரை கைப்பற்ற கடும் பிரயத்தனம்

(காபூல்)

தலிபான்களின் கோட்டையென வர்ணிக்கப்படும் கந்தகார் நகரைக் கைப்பற்றும் முயற்சியில் ஆப்கான்வடக்குக் கூட்டணியினர் தீவிர தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

கந்தகாரின் பெரும் பகுதி தலிபான்களிடம் இன்னமும் இருந்து வருவதால் அதனை மீட்கும் முயற்சியாகத் தலிபான்களின் கட்டுப்பாட்டிலுள்ள கந்தகார் நகர் மீது அமெரிக்க விமானப்படையினர் குண்டுமழை பொழிந்து வருகின்றனர்.

அமெரிக்காவின் அகோர விமானக் குண்டு வீச்சுக்களின் உதவியுடன் வடக்குக் கூட்டணியினர் மேலும் முன்னேறி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்று அமெரிக்க விமானங்கள் நடத்திய தாக்குதலில் 8 பொது மக்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தலிபான் படையினரிடமிருந்து கந்தகார் விமானநிலையம் வடக்குக் கூட்டணியினரால் ஏற்கனவே மீட்கப்பட்டுள்ளதாகவும், கந்தகார்நகர் வடக்குக் கூட்டணியினரிடம் வீழ்ச்சி அடையுமாயின் தலிபான்களின் இராணுவ பலம் முற்றாக முடக்கப்பட்டு விடுமெனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதனாலேயே கந்தகாரை மீட்கும் முயற்சியில் அமெரிக்க விமானப் படையினரின் உதவியுடன் வடக்குக் கூட்டணியினர் தீவிரமாகப் போராடி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## 22 பேர் பலி

[மாட்ரிட்]

ஸ்பெயினில் இடம் பெற்ற பேருந்து விபத்து ஒன்றில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 20 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் அனேகமானோர் பர்மாவைச் சேர்ந்தவர்களென்றும் இவ்விபத்துச் சம்பவத்தில் ஓட்டுநர் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஸ் விபத்துக்குள்ளானமைக்கான காரணத்தைக்கண்டறிய முடியுமென ஸ்பெயின் பொலிசார் தெரிவித்துள்ளனர். (உ-5)

## பீஹாரில் குழு மோதல் 14பேர் பலியாகினர்

(புதுடில்லி)

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் கடந்த புதன்கிழமை இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் 14பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

நிலத்தகராறு காரணமாக ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் இறுதியில் சாதிக் கலவரமாக மாறியதில் இக் கொலைகள் இடம்பெற்றதாக பீஹார் மாநிலப் பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கிராமத்தில் தொடர்ந்தும் பதற்றம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## அல்ஜீரியாவில் அடை மழை ஆயிரக்கணக்கானோர் பலி சேற்று மேடுகளினுள் சிக்கினர்

(அல்ஜீயர்ஸ்)

அல்ஜீரியாவில் கடந்தவாரம் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்குண்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவர்களில் 650 பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

புயல் மற்றும் வெள்ளப் பெருக்கினால் சில இடங்களில் 13 அடி உயரமான சேற்று மேடுகள் காணப்படுவதாகவும் அதனுள் சிக்குண்ட பொதுமக்களின் சடலங்களை மீட்பதில் மீட்பு பணியாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வெள்ளப் பெருக்கினால் 24 ஆயிரம் பேர் வீடிழந்துள்ளதுடன் தலைநகரமும் அதனை அண்டிய பகுதிகளுமே பெரும் பாதிப்படைந்தமைகுறிப்பிடத்தக்கது. [உ-5]

## குழந்தைவிற்பனைசெய்த டாக்டர் தம்பதி கைது

(போபால்)

குழந்தை விற்பனை செய்து வந்த டாக்டர் தம்பதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சம்பவம் அண்மையில் இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் நிகழ்ந்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது;

திருமணம் ஆகாமல் குழந்தை பெற்றுக் கொள்ளும் பெண்களின் குழந்தைகளை இவர்கள் விற்பனை செய்து வந்துள்ளனர்.

இவர்கள் ஆண்குழந்தை ஒன்றை 50ஆயிரம் ரூபாவிற்கும், பெண் குழந்தைஒன்றை 30 ஆயிரம் ரூபாவிற்கும் விற்பனை செய்துள்ளனர்.

இதுபற்றிய தகவல் அறிந்துபொலிஸார் டாக்டர் பிரமோத்ஜெயின் அவரதுமனைவி சரளா உட்பட ஊழியர்கள் மூவரையும் கைது செய்துநீதிமன்றில் ஆஜர்செய்துள்ளனர். (செ

## அமெரிக்கப் படைகள் ஆப்கானுள் நுழைவதை விட நாம் செத்து மடிவது மேல்

### தலிபான் தலைவர் திண்மான முழக்கம்

(காபூல்)

எமது எல்லைக்குள் அமெரிக்காவும் வடக்குக் கூட்டணியினரும் தொடர்ந்து தாக்குதலை நடத்தினாலும் எம்மெவ்வொருவரின் இறுதி மூச்சு இருக்கும் வரையும் போராடி அமெரிக்காவை விரட்டுவோம் என்று தலிபான் தலைவர் முல்லா முஹமட் உறுதியாக கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா அமைக்கப் போகும் அரசிற்குதலிபான்ஒருபோதும் ஆதரவு வழங்கப் போவதில்லை என்றும் அப்படி அமெரிக்கா ஆப்கானுக்குள்கால்டி எடுத்து வைப்பதை விட, நாம் மரணிப்பது மேல் என்றும் முல்லா முஹமட் தெரிவித்துள்ளார்.

மேலும் அமெரிக்கா ஆப்கான் மீது கொடுக்கும் அழுத்தம் தீவிரமடைந்தாலும் ஒஸாமா பின்லேடனை நாம் ஒருபோதும் கையளிக்கப் போவதில்லை என்றும் உறுதியளித்துள்ளார். (உ-7

## மாமிச பட்சணியான டைனோசரின் எச்சம் இத்தாலியில் கண்டுபிடிப்பு

(ரோம்)

இத்தாலியின் கிறிஸ்தியானோ செலோ மிலான் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் உலகின் மிகப்பழமை வாய்ந்ததாகக் கருதப்படும் மாமிசம் சாப்பிடும் டைனோசர் ஒன்றின் எலும்புக்கூட்டை அண்மையில் கண்டெடுத்துள்ளனர்.

20 கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்ததாக கருதப்படும் இவ் டைனோசர் இத்தாலியில் சுண்ணாம்புக்கற்கள் நிறைந்த மலை ஒன்றில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இவ் இனத்திற்கு சொவட்ரியோசோர், என பெயரிடப்பட்டுள்ளதுடன் மூன்று விரல்களைக் கொண்டிருப்பதால் இது பறவை இனத்தை சேர்ந்ததாக இருக்கலாம் எனவும் ஆய்வாளர்கள் கருத்துக் கூறியுள்ளனர்.

இதற்கு முன் மாமிசம் சாப்பிடுவதாக கருதப்படும் பழமையான டைனோசர் ஒன்று1994 இல் அமெரிக்காவில் முதல்தடவையாக கண்டுபிடிக்கப்பட்டதும், மாமிச பட்சி டைனோசரின் எலும்புக்கூடு உலகில் கண்டுபிடிக்கப்பட்டது இது இரண்டாவது என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-2)

## கைப்பற்றப்பட்ட ஆப்கான் பகுதிகளை புனரமைக்கத் திட்டம்

(வாஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் வடக்குக் கூட்டணியினருடன் இணைந்து அமெரிக்கத் தலைமையிலான சர்வதேச நாட்டுப் படைகள் கைப்பற்றிய பிரதேசங்களை புனரமைக்க அமெரிக்கா திட்டமிடவுள்ளது.

அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளின் மத்தியஸ்தத்துடன் இப் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது பற்றிய ஒருநாள் சர்வதேச பேச்சுவார்த்தை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வாஷிங்டனில் இடம் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இப் பேச்சுவார்த்தையில் 14 முக்கிய பெரும் நாடுகள் பங்குபற்றவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (உ-7)

### இந்தியப் பயணம் ரத்து

(புதுடில்லி)

இந்தியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவிருந்த நியூசிலாந்து பெண்கள் கிரிக்கெட் அணி பாதுகாப்புக் காரணங்களால் தனது பயணத்தை ரத்துச் செய்துள்ளது.

இரு நாடுகளும் கலந்து கொள்ளும் ஐந்து சர்வதேச ஒருநாள் போட்டிகளும், ஒரு டெஸ்ட் போட்டியும் நடைபெற ஏற்பாடாகி இருந்த போதிலும் ஆப்கான் மீதான அமெரிக்க தாக்குதலால் ரத்துச்செய்யப்பட்டது.

## சீன வெளிவிவகார அமைச்சின் உரையால் மக்கள் பரபரப்பு

(பீக்கிங்)

சீனாவில் றெய்ங்குவா மாகாணத்தில் ஒரிஷ்கூர் பிரிவினை வாதிகளை அனைத்துலக பயங்கரவாத அமைப்புக்களின் வலைப்பின்னலுடன் தொடர்புடையவர்கள் என்று சீனா விபரித்துள்ளது.

இதுதொடர்பாக சீனாவின் வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீல் பாங்குவா பேசுகையில் ஒரிஷ்கூர் பிரிவினைவாதிகளில் பல நூற்றுக் கணக்கானோர் ஒஸாமா பின்லேடனின் அல்குவைட்டா அமைப்பு முகாமில் பயிற்சி பெற்றுள்ளதை இரகசிய புலனாய்வுப் பிரிவின் மூலம் தான் அறிந்துள்ளதாக கூறினார்.

அதைவிட 1990ஆம்ஆண்டு றெய்ங்குவா மாகாணத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களுடனும், 1998ஆம் ஆண்டு துருக்கியில் கிஸ்லாம்பூர் நகரில் சீனத்தூதரகம் மீது நடத்தப்பட்ட குண்டு வெடிப்பு சம்பவத்துடனும் இவர்கள் தொடர்புடையவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சீன வெளிவிவகார அமைச்சர் ஒரிஷ்கூர் அமைப்பிற்கும், பின்லேடனின் அல்குவைட்டா அமைப்பிற்கும் இடையில் தொடர்பு இருப்பதாக தெரிவித்ததன் விளைவாக என்ன நேருமோ என்று சீனாவில் பெரும் பரபரப்பு நிலவி வருவதாகவும் தெரியவருகிறது. (உ-7)

## றம்ழான் வாழ்த்துதெரிவித்த அமெரிக்க அதிபருக்கு பைத்தியக்காரப் பட்டம்

(வாஷிங்டன்)

உலகெங்குமுள்ள முஸ்லிம்களுக்கு அமெரிக்கஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் றமழான் வாழ்த்து செய்தியினை வெளியிட்டுள்ளார்.

இவ்வாழ்த்துச் செய்திபற்றி உலகமுஸ்லிம் அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்ததோடு அமெரிக்காவுக்கு பைத்தியக்கார நாடு என்ற பெயரையும் சூட்டியுள்ளனர்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள முஸ்லிம் அமைப்பொன்று ஆப்கான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துவதுபற்றி கருத்து வெளியிடாத புஷ், ஆப்கான் அகதிகளுக்கு உணவுப்பொதிகள் வழங்கி சர்வதேச கவனத்தை தன்பால் இழுக்க முயற்சிக்கின்றது.

இவை இவ்வாறு இருக்க பயங்ரேவாதத்திற்கெதிரான தாக்குதல்என்ற பெயரில முஸ்லிம்களை அழித்துவரும் புஷ், வாழ்த்துச் செய்தி அனுப்பி மீண்டும் உலகளாவிய ரீதியில் நன்மதிப்புப் பெற முனைந்து வருவதோடு ஏனைய நாடுகளை முட்டாளாக்கி தனது நாட்டை பைத்தியநாடாக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

### சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருவண்ணை நகர் அருள்மிகு செந்தில்கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் கந்தசஷ்டி உற்சவத்தையொட்டி தினமும் டாக்டர் க.நவரத்தினத்தின் கந்தசஷ்டி விரிவுரையும், பிரம்மஸ்ரீ கு.சிவ ராஜசர்மாவின் 'முருகன்மகிமை' என்னும் தலைப்பிலான சொற்பொழிவும் இடம் பெறுகின்றன. [செ]

### கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

வெஸ்டன் யூனியன் பணப் பரிமாற்றம் மற்றும் மக்கள் வங்கியின் அச்சுவேலிக்கிளை திறப்பு விழா தொடர்பான கலந்துரையாடல் நேற்றைய தினம் மு.ப 10.30 மணிக்கு மக்கள் வங்கியின் யாழ். பல்கலைக்கழகக் கிளையில், பிரதேச முகாமையாளர் க. சிவபாதவிருதயர் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து ஜயசிறி பரிசுத் திட்டத்தில் வெற்றியீட்டிய நால்வருக்கு வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்பட்டது. [உ-19]

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை

குறள்

===============

# வலம்புரி

===============

## செத்தாலும் விடாரோ

யாழ் மாவட்டத்தில் தேர்தல் வேட்பாளர்களுக்கு உறக்கமேயில்லை ஏதோ ஓய்வுக்காகக் கண்ணை மூடினாலும டிசம்பர் ஐந்தாம் திகதி வாக்குச் சீட்டு எண்ணுவது போலும் அதில் சில வாக்குப் பற்றாக் குறையால் தோல்வி காண்பது போலவும் கனவு தோன்றுகிறது. என்ன செய்ய முடியும், பரமனின்படைப்பில் பதவியாசை, உயிர் போனாலும் பரவாயில்லை, உடலுக்கு ஐந்தாறு மலர் வளையமாவது கிடைக்கும் என செத்த பிறகும், சீர்பாக்கும் ஏழை மனம் சொல்லுக்கேட்பது கடினமே சரிபோகட்டுமே, அவரவர் உடல் அவரவர் உயிர் என்று விட்டு விடலாம். ஆனால் சொந்தம் எதுவுமில்லாமல், செத்தவரை சொல்லி வாக்குக் கேட்கும் கேவலம், நடப்பதைப் பார்க்கும் போது வேதனையே மிஞ்சுகிறது.

குறிப்பாக தந்தை செல்வநாயகத்தின் படத்தைக் காட்டி மரச்சின்னத்தில் போட்டியிடும் ஓர் தமிழர் அறம் புறமாக பிரசாரம் செய்கிறார். விதம்விதமான கும்பிடுகை தந்தை செல்வாவின் வழியே என் வழி என்றெல்லாம் பிரசாரம் அரங்கேறுகிறது. என் செய்ய முடியும் கொழும்பில சுகபோகமாக இருந்து கொண்டு உடையில் தமிழையும் முகத்தில் இஸ்லாத்தையும், காட்டி, வாக்குக் கேட்டும் (படக்) காட்சியைக் காணும் போது, தேர்தலில் போட்டியிட வென்றே சிலர் பிறக்கின்றார்களா என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

தந்தை செல்வாவுடன் எந்தத் தொடர்பும் இல்லாது அவரின் உருவப் படத்தைக் காட்டி வாக்குக் கேட்பதை தந்தை செல்வா கண்டால கடவுளே செத்தாலும் இந்த மனிதர் நம்மை விடாரோ என்று கவலை கொள்வார் ஒரு புறத்தில் உரிமைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது இன்னோர் புறத்தில் எவ்வகையிலும் நடைமுறைக்குச் சாத்தியமாகாத விடயங்களை வென்று தருவதாக வாக்குறுதிகளை அடுக்கிச்செல்லும் மனிதனைப் பார்த்து அந்த மரமும் என்னைப்போல் இவரும் ஒருவர் என்றெண்ணுமல்லவா?

# ஈழத்தமிழ் மக்களை இனங்காட்டும் வகையில்

# ஆடற்கலைப் பாரம்பரியம் அவசியமானது

● கலைஞரே நாட்டியக் கலையில் ஆர்வம் ஏற்பட்டமைக்கான காரணம் என்ன?

★ நான் பிறந்த மண்ணில் இருக்கும் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் சொக்குவில் ஏரம்பு சுப்பையா 1952, 1953 இல் நடன ஆசிரியராக விளங்கியமை இத்துறையில் எனக்கு நாட்டம் ஏற்படக் காரணம்மாகியது. தேசிய மட்டத்தில் அவர் தயாரித்து வழங்கிய கலை நிகழ்ச்சிகளில் என்னையும் ஈடுபடுத்தி உற்சாகம் ஊட்டினார். அன்றைய அதிபர் நவரத்தின சிங்கமும் எனது அருமைப்பெற்றோரும் எனது கலை ஆர்வத்துக்குப் பக்கபலமாயினர்.

1952 இல் எனது பதினொராவது வயதில் பொலன்னறுவையில் எலிசபெத் மகாராணிக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் இடம் பெற்ற அறுவடை நடனம், அன்றைய பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை நெடுந்தீவு வந்தபோது நிகழ்த்தப்பட்ட 'பாமா விஜயம்' நாட்டிய நாடகம் போன்றவற்றில் நான் நடித்த போது மக்களிடமிருந்தும் ஆசான்களிடமிருந்தும் கிடைத்த பாராட்டுக்கள் சிறுவனான எனக்குஇயல்பாகவே ஆடற்கலை என் மயப்படக் காரணமாக அமைந்தன.

● நீங்கள் யார் யாரிடம் இக்கலையைக் கற்றுத் தேறினீர்கள்?

★ இங்கு ஏரம்பு சுப்பையாவிடம பயின்று பத்தொன்பதாவது வயதில் புதுடில்லி சென்று கலாகேந்திராவில் குரு கோபிநாத்திடம் ஆதாரக் கற்கை நெறியை ஈராண்டுகள பயின்றேன். பின் கேரளம் சென்று விஸ்வ கலாகேந்திராவில் கதகளி நாட்டியத்தை முறையாகக் கற்றுத் தேர்ந்தேன்.

● கதகளி, பரத நாட்டியம் முதலானவற்றை ஆதாரக்கல்வியாகப்பெற்றநீங்கள கதகளியை விசேடித்துக் கற்றுக்கொள்ளக் காரணம் என்ன?

★ என்னைப் பொறுத்தவரை ஏனைய ஆடல்களை விடக் கதகளியைகலையாளும் லாவகம் ஆதூகலமான ஓர் இனிய அனுபவம். எத்தனை வயதுசென்றாலும்கதகளியை ஆடலாம். பரத நாட்டியம் அவ்வாறானது அல்ல மேலும் முகபாவம் மிக்க கூடியநடன வகை கதகளி, வெளிப்பாட்டு அம்சத்தில் தனித்துவம் மிக்கது. ஆக்கத்திறன்களுக்கு அதிக வாய்ப்புண்டு.

● தங்கள ஆரம்பகாலக்கலை முயற்சிகள் எவ்வாறு அமைந்தன?

★ இந்தியாவிற் பட்டம் பெற்றுத் திரும்பியதும் திருநெல்வேலியில் 1969 இல் 'கலைக்கோயில்' நாட்டியாலயத்தைஆரம்பித்தேன். அன்றைய எனது மாணவிகள்

> **கலைக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்த கலைஞர் வேல் ஆனந்தன் 2001.11.18 ல் மாகாணக் கல்வி அமைச்சின் உதவிக் கல்விப்பணிப்பாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்று அறுபதாவது வயது நிறைவெய்தி மணிவிழாக் காண்கிறார். அன்னாரைக் கௌரவிக்கும்முகமாக இச்செவ்வி இங்கு பிரசுரமாகிறது.**

பலர் இன்று புகழ்பூத்த நடன ஆசிரியர்களாக விளங்குகின்றனர் 1970 இல் எனக்கு முதலில் கொழும்புத் துறையிலும் பின் கோப்பாயிலும் ஆசிரியர் கலாசாலை நடன விரிவுரையாளர் பதவி கிடைத்தது. சாமானியனாக விளங்கிய எனக்கு இப்பதவி ஒரு சமூக அந்தஸ்தைத் தேடித்தந்தது. இது சமூகத்தில் எனது கலைப் பணியை மேற்கொள்வதற்கு ஆரோக்கியமானசூழலை உருவாக்கித்தந்தது.

> செவ்வி வழங்கியவர்
>
> **கலைஞர் வேல்.ஆனந்தன்**
>
> செவ்வி கண்டவர்
>
> **ஆ. சி. நடராசா**
>
> ஓய்வு பெற்ற அதிபர்
>
> யாழ். வசாவிளான் ம. ம. வி.

● தங்கள் ஆடற்கதைப் படைப்புகள் அவற்றின சிறப்பியல் புகள்பற்றி..?

★ இன்றுவரை 15 ஆடற்கதைகளை (நாட்டிய நாடகம) தயாரித்துள்ளேன். எனது மதிப்பிற்குரிய குரு கோபிநாத 'நீ ஒரு நாட்டிய நாடகத்தைத் தயாரிக்கும்போது ஆடலைக்காட்டிலும் அந்நிகழ்வின மூலம சமூகத்துக்கு எதைச் சொல்லமுறபடுகிறாய் என்பதில் கூடிய கவனம் செலுத்து' என்று அடிக்கடி கூறுவார். அந்த வேதவாக்கை நான்என்றும் மறப்பதில்லை. புராணக்கதைகளாக இருக்கலாம, சமூகக் கதைகளாக இருக்கலாம அவற்றில ஏதாவது ஒரு கருத்தைத் துலலியப்படுத்துவேன் அந்தக் கருத்தைக் கதாபாத்திரங்கள் வெளிப்படுத்தும போது சுவைஞர்கள எந்த அளவுக்கு உள்வாங்கிக் கொள்கிறார்களோ அதனையே எனது படைப்பிற் பெற்ற வெற்றியாகக் கருதுவேன் 'கலை கலைக்காக அலல அது மக்களுக்காகவே' என்பதே எனது எண்ணம்,

● தாங்கள் மேடையேறிய அரங்கங்கள்பற்றிக்கூறுங்கள்?

★ இன்றுவரை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஆக 864 தடவைகள் தடம்பதித்துள்ளேன் இந்தியாவில் கற்ற காலத்திலும், அதன் பின்பும் பல முன்னணிக் கலைஞர்களுடன் பல்வேறு நகரங்களிலும சுமார் 145 தடவைகள் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டேன்.

1982இல் பிரித்தானியசொக் நிறுவனத்தின் அமைப்பின் பேரில் எனது பிரபல மாணவிகளுடன் சென்று இங்கிலாந்து சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளின நவீன அரங்குகளில் ஏறியமை பசுமையான நினைவுகள். 2000 ஆம் ஆண்டில் கனடா சென்று மொன்றியல் ஸ்ரீ முருகன் ஆலயத்தில நிகழ்ச்சிகளைச் செய்தேன.

● தங்கள் கலைத் தாகத்துறகு வயதெல்லை தடையாக இல்லையா?

★ கலையையே வாழ்வாகக் கொண்டவன் நான். எனது வாழ்வின் எல்லை வரை மேடையேற ஆசைபபடுபவன் நான ஆடலைப் பொறுதத வரை வயதெல்லை கிடையாது. எனது குரு கோபிநாத 77 வயதிலும் கதகளிக் குரிய முடிகள், அணிகள அணிந்து 17 வயது இளைஞன போல் ஆடிய ஆட்டம எனது மனதை விட்டு அகலாது. குரு குஞ்சி குருப, கிருஷ்ணன நாயர் முதலானோர 75, 80 வயதுகள வரை மேடையேறியுள்ளனர்,

● ஆடற் கலை பற்றிய தங்கள எதிர்கால அபிலாஷைகள் என்ன?

★ ஈழத் தமிழ் மக்கள் இன்று சாவதேச ரீதியில் அறியப்படும் ஓர் இனமாக மாறிவருகின்றனர். அதற்கு வலுச் சேர்க்கும வகையில தனித்துவமான ஓர் ஆடற் கலைப் பாரமபரியத்தை உருவாக்க வேண்டியுள்ளோம ஈழத்தமிழ் இனததின் பண்பாட்டைப பிரதிபலிக்கக் கூடிய ஒருநாட்டிய பாணியை உருவாகக வேண்டும் என்பதே எனது இன்றைய அபிலாஷை ஆகும்.

மேறகு நாடுகளில் எமது நிகழ்ச்சிகளை 1982 இல் நாம நடததிய போது நாம அனியப்பட்டு நிறகும உணர்வு எனக்கு ஏற்பட்டது. அங்கு சமூகமளித்த ஐரோப்பியக் கலைஞர்கள எமது நடன முறைகள இந்திய நடன மரபுகள் எனபதை இனம் கண்டு 'ஈழத்துக்கென அபபடி ஏதும இல்லையா?' என்று வினா எழுப்பினர் அதற்கு என்னால் பதில் சொலல முடியவில்லை பதிலும் இருக்கவில்லை எமக்கென ஒரு நாட்டிய பாணியை உருவாக்க வேண்டுமென்ற சிந்தனை எனக்கு ஏற்பட்டது.

● தங்கள் சிந்தனை 'உள்ள நிலைமைகளைக் குழப்பியடிக்க முயல்கிறாரே' என்ற விமர்சிப்புக்கு உள்ளாகியிருக்குமே?

★ ஆம் அப்படிப் பலர் இருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் கருதுவதற்கான காரணிகளை நான் அறிவேன் ஆனால் பரத சாஸ்திரத்தின் மூலத்திலிருந்தே இந்தியாவில் பிரதேச வேறுபாடுகளுக்கு இணங்க தனித்துவமான பல நாட்டிய மரபுகள் உருவாகின என்பதை இவ் விமர்சகர்கள் மறந்துவிடக் கூடாது. அவ்வாறு பரத சாஸ்திர மரபு வழியில் எமக்கென ஒரு நாட்டிய மரபை உருவாக்குவதில் என்ன தவறு இருக்கிறது? நடனத்தை மக்கள் மயப்படுத்துவதற்கும் எமது பண்பாட்டு விழுமியங்களை வெளிக் கொணர்வதற்கும் இது அவசியம் என்பது எனது கருத்தாகும்.

● தேசிய சர்வதேசிய ரீதியில் பல பட்டங்கள் விருதுகள் வழங்கப்பட்ட போதும் 'கலைஞர்' என்ற பட்டம் மட்டும் தங்களுடன் நிலைத்து விட்டதேன்?

★ ஈழத்தின் பொது நிறுவனங்கள 'தாண்டவச் செல்வன், நிருத்திய கேசரி, நாட்டிய மாமணி முதலான பட்டங்களை வழங்கியிருந்தன. கலாசார அமைச்சு கலைச் செம்மல், கலா பூஷணம் விருதுகளையும் இலங்கை அரசு கலாரத்னா விருதினையும் வழங்கியிருந்தன.

பிற நாடுகளில் கத்தாகல் சர்வதேச மக்கள் அரங்கம் [I.P T.A] கலா நிகேதன் என்றும குறைக்குடி ஆதீனம் கலைத்தூது என்றும் லண்டன் தமிழர் நிலையியற் கழகம நவரசவேள என்றும் கடந்த வருடம் கூட கனடா மொன்றியல் ஸ்ரீ முருகன் தேவஸ்தானம் கலாசாகரம என்றும விருதுகளை வழங்கின.

காலத்துக்குக் காலம் 1970 களிலிருந்து இவ் விருதுகளைப் பெற்றுவந்த போதிலும் தமிழ்த் தந்தை அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் எனது ஆரம்ப காலக் கலைப் பணிகளை விதந்து வழங்கிய 'கலைஞர்' என்ற பட்டமே என் பெயரோடு ஒன்றித்து விட்டது. □

> # தினசரி தியானம்
>
> ## உடலை அலங்கரித்தல்
>
> அநித்தியத்தை நித்திய மென்று ஆதர
> வாயெண்ணுதே
> தனித்திருக்கேன் என்குதே தனை மறக்கேன்
> என்குதே!
>
> **பட்டினத்தார்**
>
> உடல் ஞாபகம் மறந்து போகவும், பரபோதம் மேலோங்கவும் இறைவா, எனக்கு நீ அருள்புரிவாயாக
>
> உடல் பற்று வைத்திருப்பவனே உடலை அலங்கரிக்கிறான். பாபங்கள் அனைத்தும் உடல்பற்றினின்று உதிக்கின்றன. உள்ளம் பரிபக்குவ மடையுமளவு உடலைப்பற்றிய எண்ணம் மறைந்து போய்விடுகிறது. உடல் வாழ்க்கை வாழ்ந்திருக்கும பொழுது உடலைப் பற்றி எண்ணாதிருப்பவனே நல்ல ஆத்ம சாதகன்.
>
> **ஸ்ரீமத்சுவாமிசித்பவானந்தர்**

## நாடகவிழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில முத்தமிழ் விழாவும், நாடக விழாவும முறையே எதிர்வரும் திங்கட்கிழமையும, செவ்வாய்க் கிழமையும அதிபர் எம். பரமசோதி தலைமையில் நடைபெறவுளளது.

நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக கலைஞர் இ. முருகையன் கலந்துகொள்ளவுள்ளார். (உ-9)

## வாக்களிப்பு 20ஆம் திகதி

(பருத்திவகை)

தென்மராட்சி வலயத்தில் அஞ்சல் மூலவாக்களிப்பிற்கு விண்ணப்பித்தவர்களுக்கான வாக்களிப்புஎதிர்வரும 20ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை9.00-பி.ப2 00 மணி வரை நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெறவுளளது. [செ-23]

## சீல்வைத்து மூடப்பட்ட சமுர்த்தி அலுவலகத்தை திறக்க நீதிமன்றம் பணிப்பு

(கொழும்பு)

அரசினால் சீல்வைத்துமூடப்பட்டுள்ள சமுர்த்தி அலுவலகத்தை உடனடியாகத்திறக்குமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவுபிறப்பித்துள்ளது.

சமுர்த்தி அமைச்சின் செயலாளருக்கு பிறப்பிக்கப்பட்ட இவ்வுத்தரவில்சமுர்த்திபணிப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட கலாநிதி குமாரி நவரத்தினாவை மீண்டும் அவரது கடமையில் நியமிக்குமாறும் அடுத்தவருடம்மார்ச் மாதம்6ந் திகதிவரை இவரது பணிக்கு வேறு எவரையும் நியமிக்கக் கூடாது எனவும் அவ் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலாநிதிகுமாரி நவரத்தின தாக்கல்செய்தமனுவை உயர் நீதிமன்ற நீதியரசர்களானசி;வி விக்கினேஷ்வரன். கி.பி.எஸ். குணசேகர ஆகியோர் நேற்றுவிசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்ததிங்களன்று கொழும்பிலுள்ள சமுர்த்தி அலுவலகம் முன்னறிவித்தல் எதுவுமின்றி சீல்வைத்து மூடப்பட்டமை தெரிந்ததே.

(ந-4)

## ஏழுபேரைக்கொண்ட இந்தியக்குழுவருகை

(கொழும்பு)

டிசம்பர்மாதம் 5ம்திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத்தேர்தலைக் கண்காணிப்பதற்கு ஏழுபேர் அடங்கிய தேர்தல் கண்காணிப்புக்குழுவொன்று இந்தியாவில்இருந்து இலங்கை வரவுள்ளது.

இத்தேர்தல் ஆணைக்குழுவுடன் நெருங்கிய தொடர்புடைய உறுப்பினர்களே இந்த வரவுள்ளனர். (வ)

## மேஜர் வள்ளுவன் உயிரிழப்பு

யாழ்; கடல்நீரேரிப் பகுதியில் கடந்த திங்கள் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் கடற் கரும்புலி மேஜர் வள்ளுவன் (முருகேசு உதயகுமார் யாழ்ப்பாணம்) என்ற போராளி உயிரிழந்துள்ளதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

(ந-5)

## தேர்தல்

களும் கலந்துகொண்டனர்;

இச்சந்திப்பில் யாழ்குடாநாட்டில் தேர்தலில்போட்டியிடும் வேட்பாளரின் பாதுகாப்பு தொடர்பாக பாதுகாப்புஅமைச்சுடன் கலந்துரையாடி ஆவனசெய்யப்படும் என்றும் தேர்தல் ஆணையாளர் உறுதியளித்துள்ளார்;

யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்படவேண்டும் என்றும் அதேபோல் ஏனையதமிழ்க்கட்சி வேட்பாளர்களையும் பாதுகாப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்றும் அரசியற்கட்சித் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேர்தலுக்கானவாக்களிப்பு முடிந்த அடுத்த தினமே வாக்குகள் எண்ணப்படுமென தேர்தல் ஆணையாளர் முன்னர் அறிவித்திருந்தபோதிலும் தற்போது தேர்தல் முடிவடைந்தகையுடன் கடந்த தேர்தலைப்போல வாக்குகளை எண்ணும்பணிகள் ஆரம்பிக்கப்படுமென தேர்தல் ஆணையாளர்அரசியல்கட்சிதலைவர்களிடம் தெரிவித்துள்ளார்

யாழ்ப்பாணத்தில் தீவுப்பகுதிக்கு வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரத்திற்கு செல்வதற்கு பாதுகாப்பு ஒழுங்குகள் செய்து தரவேண்டுமென்று தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இந்த வேண்டுகோள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக தேர்தல் ஆணையாளர் உறுதி அளித்துள்ளார்; (வ)

## ஏ-எல் முடிவு 29 இற்கு முன்

(கொழும்பு)

ஆகஸ்ட்மாதமநடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சை முடிவுகள இம்மாதம் 29ம் திகதிக்கு முன் வெளியிடப்படும் என பரீட்சைத்திணைக்களவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை புதிய கல்விச்சீர்திருத்தத்தின் கீழ் நடைபெறவுள்ள முதலாவது க.பொ.த சாதாரணதரப் பரீட்சை டிசம்பர் மாதம் 11 ஆம் திகதிநடைபெறவுள்ளது 2002ம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சை அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்று பெறுபேறுகள் விரைவாக வெளியிடப் படுவதுடன் பல்கலைக்கழக அனுமதி ஒக்டோபர் மாதம் கிடைக்குமென கல்வி அமைச்சுவட்டாரங்கள் தெரிவித்துள்ளன; (வ

## வாதுவவில்

கைது செய்யப்பட்டஇளைஞர்களிடம் அடையாள அட்டைகள் எதுவும் இருக்க வில்லையென வாதுவ பொலில் அத்தியட்சகர் சிங்ஸிலிதயானந்த தெரிவித்துள்ளார்.

இவ்விளைஞர்கள் வாதுவ பொலிஸ் நிலையத்தில் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டுவருகின்றனர், (ந-4)

## வீடியோ படக்காட்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புக்கள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும் திரைப்படக் காட்சித் தொடரில் இன்று மு.ப.10. 00 மணிக்கு புவியியல்துறை மண்டபத்தில் விஜயன் இயக்கிய ''பெருந்தச்சன்'' எனும் மலையாளப்படம் காண்பிக்கப்பட வுள்ளது;

ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இதன்இணைப்பாளர் பேராசிரியர் இரா; சிவசந்திரன் அறிவித்துள்ளார். [உ-2[

## சட்டமா அதிபர் வெளிநாடுபயணம்

சட்டமா அதிபர் கமல சபேசன் வெளிநாடு சென்றுள்ளார். அவர் திரும்பி வரும்வரை பதில் சட்டமா அதிபராக ஜனாதிபதி சட்டத்தரணி; ஆர்; டி.சில்வா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்; [வ)

## 'தமிழ்தூது' இன்று வெளியிடு

தனிநாயகம் அடிகளின் ''தமிழ்த் தூது'' நூல்வெளியீடு இன்று வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் யாழ் மாவட்ட காரியாலயத்தில் நடைபெறும்

நூலின் முதற் பிரதியை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பெற்றுக்கொள்வார்.

(ந-4)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது அன்புக்குரிய

திரு. ச. சுந்தராஜேஸ்வரசர்மா

அவர்கள்

தொழில்நுட்ப சேவையில் தரம் I ற்கு
பதவி உயர்வு பெற்றமையை இட்டு
எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அவர் மேலும் பல
உயர்வுகளைப் பெற்று
நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

அன்பு நண்பர்கள்

வேலணை. (கி-2882)



யாழ். மாவட்ட கிறிக்கற் சங்கம் மத்தியஸ்தர் குழு

யாழ். மாவட்ட கிறிக்கற் சங்கத்தின் மத்தியஸ்தர் குழுவில் பதிவு செய்தவர்கள் அனைவரையும் 18-11-2001 ஞாயிற்றுக்கிழமை காலை 10-30மணிக்கு நடைபெறும் கலந்துரையாடலில் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்;

சொ. விமலதாசன்
செயலாளர்

(கி-2883)



பொதுத் தேர்தல் - 2001



தியாக மாமனிதர்
குமார்

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

நல்லவன், நாவலன் மக்களின் காவலன்
தலைவணங்காத் தமிழன்
நிலை மாறாத தலைவன்

கொள்கை வழி செல்வோம், கொடுமை ஒழிய உழைப்போம்

திரு.அ.விநாயகமூர்த்தி
எல்.எல்.பி. இலங்கை சட்டத்தரணி
அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ்
தலைவர்
1

திரு.சி.வி.கே.சிவஞானம்
பட்டயச் செயலர்
யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க
தலைவர்
5

திரு.கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்
எல்.எல்.பி. (சிறப்பு)லண்டன் பரிஸ்ரர்
(லிங்கன்ஸ்இன்) லண்டன்
சட்டத்தரணி இலங்கை
8

படித்தவர்களை, பட்டம் பெற்றவர்களை நாடாளுமன்றம் அனுப்புவோம்
அகலட்டும் அடிமை வாழ்வு பிறக்கட்டும் பூரண சுதந்திரம்.

தமிழர் விடுதலைக்கூட்டணி

எங்கள்விருப்புவாக்குகள்
மூன்றும்
தமிழ்க் காங்கிரஸிற்கே
வாழ்க தமிழ்த் தேசியம்

1 2 3 4 5 6 7 8 9 10 11 12

(கி-3946)

- வட்டுக்கோட்டை வாழ் மக்கள்.


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள ... 2001-ம் நவம்பர் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;